Registered as a Newspaper

மாணவர்களுக்காக!
எமது நிறுவனம்
241, நாவலர் வீதியில்
(புகையிரதக் கடவைக்கு அருகில்)
New Master
INSTITUTE
Jaffna.
Monday & Saturday
திங்கள், சனி

உதயன்

விலை: ரூ. 1-25

வழமையான நேர அட்டவணையில்
சகல வகுப்புக்களும்
ஒழுங்காக
நடைபெறுகின்றன
(எமது வழமையான ஆசிரியர் குழுவினால்)
New Master
INSTITUTE
241, Navalar Road,
Jaffna.
Monday & Saturday

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

கூடு: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஆ வைகாசி மீ 10 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1407 றம்ஜான் பிறை 25 (24.05.1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 151

போராளிகளுடன் பேச

இலங்கை அரசிடம் நிபந்தனை

தூதுவர் டிக்ஸிற் மூலம் இந்தியா அனுப்பியது

புதுடில்லி, மே 24

தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் பேசியது போன்று, தமிழர் போராளிகள் அமைப்புக்களுடன் பேசுவதற்கு, இந்திய அரசாங்கம் இலங்கைக்குச் சில நிபந்தனைகளை விதித்திருக்கிறது.

அந்த நிபந்தனைகள் அடங்கிய கடிதம் ஒன்றை தூதுவர் திரு.ஜே என். டிக்ஸிற் எடுத்துச் செல்கிறார். அவர் இன்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பு போய்ச் சேருவார்.

அந்தக் கடிதத்துக்கு இலங்கை அரசு அனுப்பும் பதிலைப் பொறுத்தே, இந்திய அரசு போராளிகளுடன் பேசுவதா இல்லையா என்பதை முடிவு செய்யும்.

இனப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு இந்திய அரசு மீண்டும் முயற்சி எடுத்துவருகிறது.

அதன் ஆரம்ப கட்டமாக இந்திய அமைச்சர்கள்-அதிகாரிகள் கடந்த வாரம் கூட்டணித் தலைவர்களுடன் மூன்று நாட்கள் பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

கூட்டணியை அடுத்து தமிழ் போராளிகள் அமைப்புகளுடன் பேசுவதற்கு இந்திய அதிகாரிகள் திட்டமிட்டிருந்தனர். ஆனால் அந்தப் பேச்சுக்கள் நடக்கவில்லை.

திடீரென பேச்சு நடந்த வேளையிலும் இலங்கை அரசு யாழ்ப்பாணத்தில் இராணுவ நடவடிக்கை

(4 ஆம் பக்கம் பார்க்க)

பி பி ஸி. ஜோன் றெற்றி சொல்கிறார்

பொம்மர்கள் நேற்றும் வட்டமிட்டன

யாழ்ப்பாணம், மே 24

யாழ் நகரில் நேற்றுக் காலையும் பிற்பகலும் பொம்மர் விமானங்கள் பெரும் இரைச்சலுடன் சுற்றி வட்டமிட்டன.

நேற்றுக்காலை ஒரு மணி அளவிலும், பிற்பகல் இரண்டுமணி அளவிலும் விமானங்கள் சுற்றி வட்டமிட்டன.

புதியரக செப்பு வெள்ளை நிற பொம்மர் விமானம் ஒன்றும் நேற்று வட்டமிட்டது.

மாலை ஆறு மணி அளவில் சீ-பிளேன் ஒன்று நகரை வட்டமிட்டுச் சென்றது. (இ-10)

பாலத்தில் நேற்றும் சூடு! இருவர் காயம்

யாழ்ப்பாணம், மே 24

கோப்பாய் – கைதடி வீதியால் சைக்கிளில் வந்த இருவர் மீது ஹெலிக்கொப்டரில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதனால் மட்டுவிலைச் சேர்ந்த தம்பிரத்தினம் கரேந்திரன் (வயது 13) மிருசுவிலைச் சேர்ந்த எஸ். சுதர்சன் (வயது 13) ஆகிய இருவரும் காயமடைந்தனர்.

நேற்றுக்காலை பதினொரு மணி அளவில் இச்சம்பவம் நடைபெற்றது. (இ-10)

தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் பிராந்திய தளபதி லெப்டினன்ட் கேர்ணல் ராதாவின் பூதவுடல் அடங்கிய பேழை இறுதி ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப்படுவதை மேலே உள்ள படத்தில் காணலாம்.

ஊர்வலத்துக்கு முன்னால் ஆயுதங்களுடன் சென்ற ஆண் – பெண் போராளிகளைக் கீழே உள்ள படத்தில் காணலாம். (படம்: சண்)

ராதாவின் பூதவுடல் நேற்றுத் தகனம்

இறுதி ஊர்வலத்தில் பல்லாயிரக்கணக்கானோர்

யாழ்ப்பாணம், மே 24

விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்டத் தளபதி லெப்டினன்ட் கேர்ணல் ராதாவின் பூதவுடல் நேற்று கோண்டாவில் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இறுதி ஊர்வலத்தில் பல்லாயிரக்கணக்கான பொதுமக்களும், பெரும் எண்ணிக்கையான போராளிகளும் கலந்து கொண்டனர்.

ராதாவின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து காலை 10 மணியளவில் அலங்கார ஊர்தியில் வைத்து எடுத்துச் செல்லப்பட்டது.

விடுதலைப் புலிகளின் முன்னாள் வீரர்களால் பூதவுடல் சுமந்துவரப்பட்டு ஊர்தியில் வைக்கப்பட்டது.

ஆயுதம் தாங்கிய காக்கிச் சீருடை அணிந்த பெண் போராளிகள் அணிவகுத்து முன், புலிகளின் போராளிகள் மறுபுறமும் இரு வரிசைகளில் அணி வகுத்து முன்செல்ல ஊர்வலம் சென்றது.

பொதுமக்கள் ஊர்தியின் பின்னே அணிவகுத்தனர். (4ஆம் பக்கம் பார்க்க)

இந்திய மீனவர் இருவர் பலி

சென்னை, மே 24

இந்திய மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு மீனவர்கள் கொல்லப்பட்டனர்.

நேற்றுக்காலை இச்சம்பவம் இடம் பெற்றது.

இந்திய மீனவர்கள் ஐந்து பேர் இந்திய கடற்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த பொழுது அங்கு வந்த சேர்ந்த இலங்கைக் கடற்படையினர் அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதன் காரணமாக ஒருவர் படகிலும், மற்றவர் தஞ்சாவூர் மருத்துவ மனையிலும் மரணமானார்கள்.

மேலும் மூவர் காயமடைந்த நிலையில் தஞ்சை மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (இ-10)

● ஐவர் நிலை கவலைக்கிடம்

கொழும்பு, மே 24

கண்ணிவெடி இருக்கும் தமிழ் அரசியல்கைதிகளில் ஐவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

கொழும்பு மகசீன் சிறையில் இவர்கள் கடந்த 21 நாள்களாக உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

செல்லத்துரை கணேசரட்னம், நற்பிரசாத் சுந்திரன், கோபால (4 ஆம் பக்கம் பார்க்க)

ஜே. ஆரின் செய்தி

ராஜீவிடம் கையளிப்பு

புதுடில்லி, மே 24

ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் சிறப்புச் செய்தி ஒன்றை இலங்கைத் தூதர் வெள்ளிக்கிழமை பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்து வழங்கினார்.

இலங்கை இனப்பிரச்சினை பற்றிய நற்போதை நிலை குறித்து திரு. திலகர்த்தினு பிரதமர் காந்தியிடம் விளக்கினார்.

இச்சந்திப்பின் போது கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் திரு. ஜே. என் டிக்ஸிற்றும் சமுகமளித்திருந்தார்.

இலங்கை நிலைமை குறித்து திரு. டிக்ஸிற்றும் பிரதமருக்கு எடுத்துச் சொன்னார். (இ-7)

வல்வை வல்லைப் பகுதிகளில்

மூன்று தினங்களாக தொடரும் ஹெலித் தாக்குதல்

வல்வெட்டித்துறை மே 24

வல்வை, வல்லை ஆகிய இடங்களில் கடந்த மூன்று தினங்களாக ஹெலிகொப்டர் தாக்குதல் தொடர்கதையாக இடம் பெற்றன.

வல்லை வெளியார் செல்லும் பலவிடங்களில் வாகனங்கள் மீதும் ஹெலித் தாக்குதல்கள் கடந்த மூன்று தினங்களாக இடம்பெற்று வந்தன.

நேற்று வல்வையில் ஹெலிகொப்டர், கொல்மர் லவ் தடவை வட்டமிட்டு சரமாரி வேட்டைகளில் ஈடுபட்டன. மக்கள் பாதுகாப்புத் தேடி ஓடித்தலைமறைவாகினர்.

நேற்று வல்வைச் சந்தியில் வீதி திருத்த வேலையில் ஈடுபட்டிருந்த தொழிலாளர் மீது ஹெலிகொப்டரில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

பின்னர் வல்லை வெளியால் சென்றுகொண்டிருந்த வாகனங்கள் மீதும் ஹெலித் தாக்குதல் இடம் பெற்றது.

பருத்தித்துறையிலும் ஹெலித் தாக்குதல் இடம் பெற்றது. (இ-7-160)

மெதுவெதுவாய் தமிழ் நாட்டோடை கரண்டிக் தொட்டுவிடலாம் என்று சொல்லு பிள்ளை.....!

இறுதித் தாக்குதலுக்கு தீர்மானம்எடுத்தாயிற்று?

குடாநாட்டில் பத்தாயிரம் துருப்புகள் தயார் நிலையில்

லண்டன், மே 24

இறுதித் தாக்குதல் ஒன்றை யாழ் குடா நாடு மீது நடத்த இலங்கை அரசு முனைந்து வருவதாகவே தெரிகிறது.

பலாலி இராணுவ முகாமுக்கு கடுதலான கொண்டர் டாக்டர்கள் சேவைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இறுதித் தாக்குதல் நடத்தவது என்ற தீர்மானத்தை அரசு எடுத்துவிட்டது.

பி. பி. ஸியின் கொழும்புச் செய்தியாளர் ஜோன் றெற்றி இப்படி அறிவித்திருக்கிறார்.

திரு றெற்றி அனுப்பிய செய்தியை நேற்று பி பி ஸி. ஒலிபரப்பியது

அத்துடன் பி. பி. ஸி. நேற்று தனது விசேஷ நிருபர் ஒன்றின் இலங்கை நிலைமை பற்றி திரு றெற்றியை பேட்டிகண்டு ஒலிபரப்பியது.

கேள்வி; எப்பொழுது யாழ் குடா மீதான இராணுவத் தாக்குதல் இலங்கை அரசு ஆரம்பித்தது?

றெற்றி; தரை வான் சமரான ஏராளமான துருப்புக்களையும் ஆயுதங்களையும் ஆனையிறவுக்கு இலங்கை அரசு அனுப்பி வைத்தது.

குடாநாட்டின் ஏனைய முனைகளுக்கு கடல், ஆகாய மார்க்கமாகவும் துருப்புக்கள், ஆயுதங்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

விமானக்குண்டு வீச்சு, ஹெலிகொப்டர் தாக்குதல்கள் பரவலாக யாழ் குடாவில் இடம் பெற்று வருகின்றன.

காரணம்

கேள்வி: பெரிய அளவிலான இறுதித் தாக்குதல் ஆரம்பிப்பதற்கு அரசைத் தூண்டியது என்ன?

றெற்றி: (4ஆம் பக்கம் பார்க்க)

சுபநேரம்

14-05-1987

ஞாயிற்றுக்கிழமை சுபநேரம்:–

8-53 முதல் 10-23 வரை

ராகுகாலம்:–

4-23 முதல் 5-53 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

தபையில பிரேரணைகாச ஆவேசம்!

இலங்கையின் அழிவுக்கு வித்திட்டது இந்தியாவே

அதன் இரட்டை வேடத்தை எதிர்க்கின்றேன்

கொழும்பு, மே 24

இலங்கையின் அழிவுக்கு வித்திட்டது இந்தியாவே. இன்று இந்தியா இலங்கைக்கு ஆலோசனை கூறுகிறது.

அது எப்படி உண்மை என்று தெரியுமா? 'பெரிய' நண்டு, சின்ன நண்டைப் பார்த்து நேராக நடந்து செல்" – என்று கூறுவதைப் போல உள்ளது.

இப்படிப் பிரதமர் பிரேமதாச தெரிவித்தார். அவசரகால நீடிப்புப் பிரேரணை பற்றிய விவாதத்துக்குப் பதில் அளித்துப் பேசுகையில் பிரதமர் இப்படிக் கண்டனம் தெரிவித்தார்.

பிரதமரின் பேச்சு வருமாறு:

பஞ்சாப்பில் நூறு பேர் கொலைப்பட்டவுடன் இருப்புக் கரம் கொண்டு நிகழ்வாதத்தை ஆடக்கப் போகின்றேன் என்று பிரதமர் ராஜீவ் கூறுகிறார்.

இலங்கையில் நூறு பேருக்கு மேல் கலவரத்தவுடன், பேச்சுவார்த்தையை நடத்துங்கள் என்று இந்தியா கூறுகிறது. (4ஆம் பக்கம் பார்க்க)

ராணுவத் தாக்குதல்கள் பேச்சுக்கு உதவமாட்டா

இந்தியா மீண்டும் இடித்துரைப்பு

கொழும்பு, மே 24

யாழ் குடாநாடு மீது இராணுவத் தாக்குதல் தொடர்ந்து நடத்தப்படுவது, பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான கனிந்த சூழ்நிலையை ஏற்படுத்த உதவாது என்று இலங்கையிடம் இந்தியா மீண்டும் இடித்துரைத்திருக்கிறது.

இந்தியாவின் வலியுறுத்தலை கடந்த வெள்ளிக்கிழமை வெளியுறவு அமைச்சர் சாரூக் ஹமீதைச் சந்தித்தபோது மாநில இந்தியத் தூதர் திரு. எச் எஸ் பூரி வெளிப்படுத்தினார்.

யாழ்ப்பாணத்தில் ஆகாய, தரை, கடல் தாக்குதல்களைத் தொடர்வது, பேச்சுக்களைத் தொடர முடியாத நிலையத்தான் ஏற்படுத்தும். வடக்கில் இடம்பெறும் சம்பவங்கள் தொடர்பான உண்மை நிலை வெளிக்கொணர்வது தடைப்பட்டுள்ளது. தொலைத் தொடர்பு, போக்கு (4 ஆம் பக்கம் பார்க்க)

பொதுமக்கள் படுகொலைகளில் தமிழக அரசுக்கும் பங்கு

ரூபவாஹினிக்கு லலித் பேட்டி

கொழும்பு, மே 24

தீவிரவாத இயக்கங்களான தமிழீழ விடுதலைப் புலிகளும், ஈரோஸும் பொதுமக்களைக் கொலை செய்து வருகின்றன. தமிழ்நாடு அரசு இந்த இரு இயக்கங்களுக்கும் நிதி உதவி அளிப்பதால் பொதுமக்கள் படுகொலைகளுக்கு தமிழ்நாடு அரசும் பங்கு ஏற்க வேண்டும்.

தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி நேற்று ரூபவாஹினிக்கு அளித்த விசேஷ பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார். (4ஆம் பக்கம் பார்க்க)

ஊர்விட்டு ஊர்மாறும் அகதிகளின் பரிதாப நிலை

யாழ்ப்பாணம், மே 24

இராணுவ நடவடிக்கைகளால் அகதிகளாகி இடம் பெயர்ந்த பல தமிழ் மக்கள் இன்று நடோடிகளின் நிலையில் ஊர் ஊராக அலைந்து திரிகின்றனர்.

பொம்மர், ஹெலி, ஷெல் தாக்குதல்களே இதற்குக் காரணம்.

இந்த வகையில் திருமலை அகதிகள் மலர் வயல்களில் தங்கியிருந்தனர்.

பலாலி முகாம் செடுபிடிகளால் அவர்கள் அச்சவேலிப் பகுதிக்கு இடம் பெயர்ந்தனர்.

கடந்த வாரம் அச்சுவேலிப் பகுதியில் நடைபெற்ற பொம்மர், ஹெலி தாக்குதல்களால் அங்கிருந்தும் தற்பாது வெளியேறியுள்ளனர்.

இதேபோல் பல இடங்களிலும் அகதிகளாக இருந்த மலர் நடோடிகள் நிலையில் ஊர் மாறி அலைந்து திரிகின்றனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரங்கள்

விரைவினைக்கு

பல தேசிய இனங்களைக் கொண்ட சோவியத் ஒன்றியத்தில், இனப் பிரச்சினையை எப்படித் தீர்த்து வைத்தார்கள் என்பதைப்பற்றி அறிய நம்நாட்டு சேவிய இயக்கத்தில் முன்னோடிகளில் ஒருவரான சங்கரத்தரணி த துரைசிங்கம் எழுதிய 'லெனினும் ஆசியாவும்' என்ற நூலைப் படியுங்கள்.

இந்நூலின் தமிழ், சிங்கள, ஆங்கிலப் பதிப்புகள் புத்தகசாலைகளில் கிடைக்கும்.

விலை ரூபா 10 சோவியத் ஆய்வுக் கழகம் 31, விக்டோரியா வீதி, கொழும்பு - 11

சேவை

தரமான ரேடியோ பிரதிகள், நாட்டெழுத்து வேலைகள் சகல அச்சு வேலைகளும் குறித்த நேரத்தில் தரமாகச்செய்து கொடுக்கப்படும். தயாகச்சகம், 138, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (வீரசிங்கம்)

(2841)

நூற்றுக் கணக்கான

சிமெந்து ஆலை ஊழியர் வேலையின்றித் தவிப்பு!

யாழ்ப்பாணம், மே 24

காங்கேசன்துறையில் உள்ள சிமெந்துத் தொழிற்சாலைக் முடப்பட்டிருப்பதால் பல நூற்றுக் கணக்கான குடும்பங்கள் பட்டினிச் சாவை எதிர் நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை, லங்கா சிமெந்து லிமிட்டட் ஆகியவற்றில் 500 க்கும் மேற்பட்ட ஊழியர்கள் நிரந்தரமாக வேலை செய்து வந்தனர்

இவர்கள் வேலை செய்தால் மட்டுமே இவர்களுக்கு சம்பளம் வழங்கப்படும்.

இப்பொழுது ஒருவாரம் இவர்கள் சம்பளம் இல்லாமல் பெரும் கஷ்டப் படுகின்றனர்.

இதே வேளை தொழிற்சாலைகள் இயங்காததினால் சிமெந்துக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் மேல் வேலை செய்யும் தொழிலாளர்கள், கூலி வேலை செய்பவர்கள் ஆகியோரும் வேலையிழந்து சிரமப்படுகின்றனர்.

நாடெங்கும் நிலவும் நிர்வாகமான இவர்கள் வேறு தொழிலும் செய்ய முடியாத சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

தொடர்ந்தும் ஒரு மாதங்கள் தொழிற்சாலைகள் மூடப்பட்டால் இவர்கள் நிலைத்துக்கூட வாழ்க்க முடியாத அளவுக்கு கஷ்டங்கள் ஏற்படும்.

தொழிற்சாலைகள் சிமெந்து உற்பத்தி செய்யாத நிலையில் தனியார் கடைகளில் ஒரு பைக்கற் சிமெந்து 150 ரூபா முதல் 175 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது

(இ-7)

காலிநடை வளர்ப்போர் சங்கம்

கிளிநொச்சி, மே 24

கிளிநொச்சி மாவட்டக் கால் நடை வளர்ப்போர் சங்கம் கிளிநொச்சி கணேசபுரத்திலுள்ள மிருக வைத்திய நிலையத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது

கிளிநொச்சி மிருக வைத்திய அதிகாரி டாக்டர் க ஸ்ரீ ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு பிரிவுகளிலுமிருந்து பொதுமக்கள் அனேகர் வருகைதந்தனர். (இ-76)

சிரங்கு நோய் பற்றி புத்தகம் வெளியீடு

வட்டுக்கோட்டை, மே 24

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தில் ஆதரவுடன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆரோக்கியதார ஆராய்வு நிலையம் 'சிரங்கு நோய்' சம்பந்தமான வெளியீடு ஒன்றை வெளிட்டுள்ளது.

வேலாயுதர் த.இராமநாதனினால் ஆக்கப்பட்ட இந்த வெளியீடு இன்றைய சூழ்நிலையில் பொது மக்களுக்குப் பெரும் பயனுள்ளதாகக் கருதப்படுகிறது.

'சிரங்கு நோய்' பற்றிய பூரண விளக்கமும் நோயைத் தடுக்க வேண்டிய முறைகளும் நோயுள்ளவர்கள் கவனிக்கவேண்டிய விடயங்களும் சிறந்த முறைகளும் இந்த வெளியீட்டின் மூலம் விளக்கப்பட்டுள்ளன.

யாழ் மாநகரப்பகுதியில் தற்போது சிரங்கு நோய் பரவி பொது மக்களுக்குப் பெரும் தீங்கு விளைவித்து வருவதைக் கருத்தில் கொண்டே வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் இந்தப் புத்தகத்தை வெளியிட்டிருக்கிறது.

பற்சிகிச்சைக் கிளினிக்

வட்டுப்பிட்டி, மே 24

செம்பியன்பற்று அரசினர் வைத்தியசாலையில் பற்சிகிச்சைக் கிளினிக் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது

பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெறும் இக் கிளினிக்கில் பற்சிகிச்சை அரசினர் வைத்தியசாலை பல் வைத்திய நிபுணர்கள் சிகிச்சை அளிக்கின்றனர்

இக் கிளினிக்கின் மூலம் உடுத்துறை, வெற்றிலைக்கேணி, கண்டிகுக்குளம், ஆனியவளை, மருதங்கேணி, செம்பியன்பற்று ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் வைத்திய வழி பெற்றுள்ளனர். (உ-157)

கிளிநொச்சியில் மெய்வல்லுனர்போட்டி

கிளிநொச்சி, மே 23

கிளிநொச்சி கொத்தணி அமைப்பின் கீழ் உள்ள பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டி எதிர்வரும் ஜூன்மாத முற்பகுதிக்கு முன்னர் நடத்தப்படும்.

இதனைத்தொட்டு கிளிநொச்சி கொத்தணிப் பாடசாலைகளில் மூன்றாப் பாடசாலையாக விளங்கும் கிளிநொச்சி மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தை சிரமதான முலம் செப்பனிடும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்ட இச் சிரமதான வேலைகளை கிளிநொச்சி கொத்தணி அதிபர் திரு. நா. சோதிநாதன் உமிபத்திரன் சம்பிராதய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

(இ-76)

அபிவிருத்திச்சங்க பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், மே 24

ஆண்டுப்பற்றி மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலையில் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் திரு. ச. வையாபிள்ளை தலைமையில் நடைபெறும். (உ)

அரச நன்கொடையாக 3 லட்சத்து 35 ஆயிரம் ரூபா சனசமூக நிலையங்களுக்கு

யாழ்ப்பாணம், மே 24

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள 796 பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்களுக்கு 1986 ஆம் ஆண்டிற்கான அரச நன்கொடைப் பணமாக 3 லட்சத்து 35 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

இந்த நன்கொடைப் பணத்திற்காகவாரேனக்கு யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபை உப அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பதிவுசெய்யப்பட்ட 'அ' பிரிவு சனசமூக நிலையங்களுக்கு 600ரூபா வீதமும் 'ஆ' பிரிவு சனசமூக நிலையங்களுக்கு 300ரூபா வீதமும் வருடாந்தஅரச நன்கொடைப் பணமாக வழங்கப்படும்.

பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்களில் தலைவர், செயலாளர், பொருளாளர் என் தற்தமது பகுதி அபிவிருத்திச்சபை உப அலுவலகங்களில் உரிய அத்தாட்சிக் சான்றுப் பத்திரங்களைச் சமர்ப்பித்து இந்தப் பணத்தைத் தாமதமின்றிப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசப் பொதுச்செயலாளர் திரு. சி. வரதராசா அறிவித்துள்ளார்.

இதுவரை சனசமூக நிலையங்களின் மாதாந்தக் கூட்டங்கள் பற்றிய அறிக்கையின் பிரதியைத் தமது யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபை உப அலுவலகங்களுக்கு அனுப்பாத நிலையங்கள் உடன் அவற்றை அனுப்பும்படியும் அவர் கேட்டுள்ளார். (உ-ன)

உயர்தர வகுப்பிற்கு மாணவர்களைச் சேர்ப்பதில் பல்வேறு நடைமுறைகள்

பெற்றோர்கள் கவலை தெரிவிப்பு

வட்டுக்கோட்டை, மே 24

யாழ் மாவட்டத்தில் உள்ள கல்லூரிகளில் ஜீ. சீ. ச உயர்தர வகுப்பு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதில் வேறுபட்ட நிபந்தனைகளை அதிபர்கள் கடைப்பிடிப்பதுகுறித்து பெற்றோர் பெரும் கவலைகொண்டுள்ளனர்.

உயர்தர வகுப்புகளில் மாணவர்களைச் சேர்க்கும்போது சில கல்லூரிகளில் ஜீ சீ ச சாதாரணப் பரீட்சையில் ஒரே தடவையில் இரண்டு திறமைச் சித்திகளைப் பெற்றிருக்கவேண்டுமென்றும் சில கல்லூரிகளில் 8 திறமைச் சித்தியாவது பெற்றிருக்க வேண்டும் என்றும் கூறி மாணவர்களைச் சேர்த்துக் கொள்கின்றனராம்.

வேறுசில கல்லூரிகளில் சலுகைக் வழங்கப்படுவதாலும் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

கல்வித் திணைக்களம் சரியான திட்டத்தைவகுத்து அதற்கு சகல கல்லூரி அதிபர்களும் கடைப்பிடிக்க ஆவன செய்யாமையாலேயே இந்தமாய குளறுபடிகள் கல்லூரிகளில் இடம் பெற்றுவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உயர்தர வகுப்புகளில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதில் பொதுத் திட்டமொன்று வகுக்கப்படுவதை கல்விப் பணிப்பாளர் உறுதி செய்யவேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. (உ-161)

காட்டுப்புலத்தில் மேலும் 30 வீடுகள் அமைக்க நிதியுதவி

வட்டுக்கோட்டை, மே 24

இவ்வாண்டு சர்வதேச வீடமைப்பு ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டதை அடுத்து யாழ். மாவட்டத்திலுள்ள உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவுதோறும் ஒவ்வொரு கிராமங்கள் மேலதிகமாக வீடமைப்புத் திட்டம் வழங்குவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த அடிப்படையில் சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வலி புரத்திலுள்ள காட்டுப்புலம் கிராமம் பின்தங்கிய கிராமமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இக்கிராமத்தில் உள்ள 30 குடும்பங்களுக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா வீடமைப்புக் கடனுக்கு மாடாசாலைப் புதிய கட்டடம் அமைக்க ஒரு லட்சம் ரூபாவும் சுகாதார நிலையம் அமைக்க 75 ஆயிரம் ரூபாவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

காட்டுப்புலத்தில் இவ்வாண்டு 30 வீடுகள் மேலதிகமாக அமைக்கப்பட கிருப்பது குறிப்பிடத்தக்கது

(உ-161)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்ய

யாழ். ஆஸ்பத்திரி

இரத்த வங்கி

உங்கள் சேவையை எதிர்பார்த்து நிற்கிறது!

இரத்த தானம் செய்யுங்கள்!

விரைந்து செய்வீர்!!

தொடர்ந்து செய்வீர்!!!

தானத்தில் சிறந்தது இரத்ததானம்

உயிர் காக்கும் சஞ்சீவி

இன்றைய இக்கட்டான காலகட்டத்தில் உங்கள் உடன் பிறப்புக்களின் உயிர்கள் விலைமதிக்க முடியாத, திரும்பக் பெற இயலாத மாபெரும் சொத்துக்கள்.

மரணத்துடன் போராடுபவரை நீங்களும் காப்பாற்றலாம்

உயிர் காப்பது உன்னத பணி

பிரசார்த்தனை இயக்கம்; மீண்டும் நடத்த இ. தொ. கா. முடிவு

கொழும்பு, மே 24

பிரசார உரிமை வழங்குவதை தாமதப்படுத்தாமல் அரசாங்கத்தை நிர்ப்பந்திப்பதற்காக பிரார்த்தனை இயக்கம் ஒன்றை நடத்துவதென இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

ஜூன் 1, 2, 3 ஆம் திகதிகளில் இப் பிரார்த்தனை இயக்கம் நடைபெறும்.

இம் மூன்று தினங்களிலும் தொழிலாளர்கள் வேலைக்குப் போகமாட்டார்கள். வீடுகள், ஆலயங்களில் தங்கியிருந்து பிரார்த்தனை செய்வார்கள்.

4 லட்சத்து 68 ஆயிரம் தோட்டத்தொழிலாளர்களுக்கு பிரசார உரிமை வழங்குவதை தாமதப்படுத்தாமல் நிர்ப்பந்திப்பதே இந்த இயக்கத்தின் நோக்கம் என்று இ தொ கா பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (உ-ன)

அவசரகாலச் சட்டம் நீடிப்புப் பிரேரணை

2 எம். பிக்கள் எதிர்த்து வாக்களிப்பு

கொழும்பு, மே 24

அவசரகாலச் சட்டத்தை நீடிக்கக் கோரும் பிரேரணை கெஹெலிய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது

பிரேரணைக்கு ஆதரவாக 114 எம். பிக்கள் வாக்களித்தனர்.

கலவான எம். பி டியூ குணசேகரவும் மகாஓய எம் பி. திலேஷ் குணவர்தனவும் எதிர்த்து வாக்களித்தனர்

வாக்கெடுப்பு நடந்த போது சுதந்திரக்கட்சி எம் பிக்கள் சபையில் இருக்கவில்லை

ஆரம்பத்தில் நாடாளுமன்ற, விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. விஜயகட் பெரேரா விவாதத்தைத்தொடக்கி வைத்துப் பேசினார்.

'சட்டம், ஒழுங்கைப் பராமரிக்க அரசு முயற்சிக்கிறது, எப்படியாவது நாட்டில் சமாதானத்தைக் கொண்டுவர அரசு தன்னாலியன்ற நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது நீதிமான்களின் இதற்குத் நடைமாக உள்ளன''—

இப்படி அமைச்சர் விஜயகட பெரேரா சொன்னார்.

எதிர்க்கட்சித் தலைவர் அமுனுகம கண்டாரநாயக்க பேசுகையில்.

'நீதிமான்களைத் தடுக்க அவசரகாலத்தை மாதாமாதம் நீடிப்பதைத்தவிர அரசு வேறு என்ன செய்கிறது? அரசு பூர்வமான நடவடிக்கை எங்கே?- என்று கேட்டார். (இ-ன)

வடக்கு, கிழக்கு உப்பளங்களில் உற்பத்தி வீழ்ச்சி

கொழும்பு, மே 24

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள உப்பளங்களில் உப்பு உற்பத்தி வீழ்ச்சி கண்டுள்ளது

இதனை ஈடுசெய்ய தென்னிலங்கை உப்பளங்கள் அதிகரித்து செய்யப்படவுள்ளன.

வடக்கு, கிழக்கில் ஐந்து உப்பளங்கள் உள்ளன இவற்றின் உற்பத்தியில் ஆண்டுக்கு ஒரு லட்சம்தொன் உற்பத்தி வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இந்தவேளைக்கே தேவையான உப்பைக் கூட்டுறவாளர்கள் எம் பி. பெரப்பிக்கிய தெரிவித்தார்.

தென்னிலங்கை உப்பளங்களில் இப்போது ஆண்டுக்கு 50 ஆயிரம் தொன் உப்பு உற்பத்தியாகின்றது. இது நாட்டின் தேவைக்குப் போதாது. இத்தொகை 85 ஆயிரமாக அதிகரிக்கப்படவுள்ளது —

இது வெரப்பிட்டியா மேற்கண்டவாறு தெரிவித்தார். (உ-ன)

மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

கெருடாவில் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கக் கோரிக்கை

வட்டுப்பிட்டி, மே 24

ஆயுதப்படையினரின் வெடிபிடியில் 254 ஏக்கர் விவசாயச் செய்கையை இழந்துள்ள கெருடாவில் பகுதி விவசாயிகளுக்கும், கலியாட்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும் என்று வாழ் அரசாங்க அதிபருக்கு மகஜர் அனுப்புவதெனத் தீர்மானிக்கப்பட்டது

கெருடாவில் கிராம அபிவிருத்திச் சங்கமும், விவசாய உற்பத்தியாளர் சங்கமும் ஒருங்கிணைந்த நடத்திய கூட்டத்தில் இப்பகுதி தீர்மானிக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் விவசாயப் பெரும்பாலான உத்தியோகத்தர் திரு. வி, இராசையா, விவசாயப் போதனாசிரியர் திரு ஆர். சத்தரலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர்

கூட்டத்தில் முடிவு செய்யப்பட்ட தீர்மானத்தில், வடமேற்கு மாகாண விவசாய திணைக்களம், கமநல அபிவிருத்தி திணைக்களம், கால்நடை வளர்ப்துறை, தொண்டமானாறு, ஆயுதப்படை முகாம்களிலுள்ள ஆயுதப் படையினரிடம், நடவடிக்கைகளினால் கெருடாவில் பகுதிவிவசாயிகள் விவசாயத்தைக் கைவிடுகின்றனர். இவ்விவசாயிகள் வாழ வழியின்றி கஷ்டப்படுவதனால் அவர்களுக்கு நிவாரணம் வழங்க அரசு அதிபர் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது (உ-157)

கிராமசேவகர் பிரிவுகள்

தீவுப்பகுதி வடக்கு வலிகாமத்தை உதவி அரசாங்க பிரிவில் மேலும் ஐந்து கிராம சேவையாளர் பிரிவுகள் செயல்படவுள்ளன

தற்போது செயற்பாட்டிலிருக்கும் காரம்பன் கிராம சேவையாளர் பிரிவு காரம்பன், காரம்பன் கிழக்கு, காரம்பன் மேற்கு ஆகிய இரு புதிய பிரிவுகளாகவும்—

நாரந்தனைப் பிரிவு, நாரந்தனை வடக்கு என இரு பிரிவுகளாகவும் காரைநகர் மத்தி, காரைநகர் தெற்கு ஆகிய புதிய பிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. (உ-18)

நெடுந்தீவிற்கான உணவுப்பொருள்: ஏற்றி இறக்குவதில் சிக்கல் நிலை!

அதிக கூலி வேண்டும் என்கிறது ப. நோ. கூ. ச

யாழ்ப்பாணம், மே 24

நெடுந்தீவிற்கான உணவுப் பொருள்களை ஏற்றி இறக்குவதற்கான கூலியை அதிகரிக்கத் தவறினால் கல்வேலியிலிருந்து நெடுந்தீவு வலிநோக்குக் கப்பலை விலகிக் கொள்ளும்

யாழ் உணவுத் திணைக்களக் உதவி ஆணையாளருக்கு சங்கத்தின் தலைவர் திரு நா. இராமலிங்கம் எழுதியுள்ள கடிதத்தில் இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அக்கடிதத்தில் கூறப்பட்டிருப்பதாவது:

உணவுத் திணைக்களத்தின் நெடுந்தீவுக் களஞ்சியம் மூடப்பட்டு, உணவுப் பொருட்களின் இறக்குமதி ப நோ கூ சங்கத்திடம் கையளிக்கப்பட்டபோது 19 ஏப்ரலில்— அரிசி மா, சீனி என்பனவற்றின் ஏற்றக் கூலியாக அதிகார ஒன்றுக்கு 7.36 சதம் வழங்குவதென திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப் பட்டது இது செலவுகளின் அடிப்படையிலேயே நிர்ணயிக்கப்பட்டது.

இதனை அதிகார ஒன்றுக்கு 7.43 சதமாக அதிகரிக்குமாறு சங்கம் 1980 நவம்பரில் கேட்டுக் கொண்டது

இதன் பின்னர் 1984 ஆம் ஆண்டில் ஏற்றுக் கூலியை அதிகார ஒன்றுக்கு 9.20 சதமாகவும்—

1985 ல் இதனை 11.45 சதமாகவும் ஏற்றுமதிச் செலவுகளின் அதிகரிப்பைக் காரணமாகக் கொண்டு கூட்டித்தருமாறு கேட்டிருந்தோம்.

திணைக்களம் எமது கோரிக்கைகளை ஆராய்ந்து நிவாரணம் அளிக்க முன்வரவில்லை.

1980 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை பெறப்பட்ட உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டதிலுள்ளவாக ஏற்றுமதிச் செலவாக திணைக்களம் வழங்கியதைவிட 5 அல்லது 6 இலட்சம் ரூபாவை சங்கம் மேலதிகமாக தனது சொந்த நிதியிலிருந்து செலவிட்டுள்ளது.

இதனை எமக்கு மீளளிப்புச் செய்யுமாறு நாம் பல தடவை கோரியிருந்தும் திணைக்களம் இவ்விடயம்தொடர்பாக எவ்வித ஆலோசனையும் செய்யவில்லை மாறாக [illegible] எமக்கு மட்டும் தீர்மானித்த எமக்கு வழங்கப்படும் கடன்தொகையில் அடிக்கடி கடுமையாக அறவீடு செய்வதில் மூலம் சில சமயங்களில் உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்வதில் எமக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தினாலாவது கவனிக்குமாறு கூறும்.

இந்நிலை தொடருமானால் சங்கம் இவ்வேற்றுமதி வேலையிலிருந்து விலகிக் கொள்வதைத்தவிர வேறு வழியில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

எவ்வாறாயினும் 1980 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையான எம்மால் வழங்கப்பட்டசரக்கு கணிப்புகளுக்கு மாறான மேலதிக ஏற்றுக் கூலியை வழங்கும்படியும்—

நடைமுறையிலுள்ள தற்போது கேவிக்கான ஏற்றுக்கூலிக் கழிவுகள் வழங்கப்படுவது போல் வருங்காலங்களில் எமக்கும் வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் நடவடிக்கை கேட்டுக் கொள்கிறேன்.

—இப்படி தெரிவிக்கப்பட்டுள்ளது (உ)

கிளிநொச்சி மாவட்டம் ஏழு தமிழ் டாக்டர்கள் வெளிநாடுகளில்

மானிப்பாய், மே 24

புற்றுநோய்ச் சிகிச்சையில் நிபுணத்துவம்பெற்ற ஏழு தமிழ் டாக்டர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டனர். புற்றுநோய்ச் சிகிச்சை பற்றிய பயிற்சியைப் பெற்றவரும் ஒரேயொரு டாக்டருமான வைத்திய கலாநிதி மகேஷ் ஒருவரும் உதவ முன்வரவேண்டும்'

இன்னாள் மானிப்பாய் வைத்தியாக்கல்லூரி அதிபர் திரு. ச. தனஞ்செயன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கல்லூரி இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற மானிப்பாய் வைத்தியர் பாடசாலையின் அதிபர்கள் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

புற்றுநோய் சிகிச்சைக்கான ஜி. ஜி பொன்னம்பலம்நிதி வைத்தியக் நிதி வசதி ஆகியவை பெறப்பட்டும்கூட அவை போதாமல் உள்ளன.

எதிர்வரும் ஜூன் மாதத்தில் புற்றுநோய்ச் சங்கத்தினர் நிதி திரட்டு வாரத்தை நடாத்தும் வேளையில் ஒவ்வொரு பாடசாலையிலும் மாணவர்கள்மூலம் அதிகப்படியான நிதியினைத் திரட்டி வழங்க அதிபர்கள் உதவ வேண்டும்.

—இப்படி அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (உ-90)

விவசாயிகளுக்கு கடன் வசதி

ஆரலி, மே 24

உலக தரிசன நிறுவனம் வழங்கிய நிதி உதவியின் மூலம் ஆரலி தெற்கு, கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆடு வளர்த்தல், மாடுவளர்த்தல், கோழிவளர்த்தல் மேட்டு நிலப்பயிர்ச் செய்கை போன்றவற்றில் ஈடுபடும் விவசாயிகளில் 88 பேருக்கு கடன் வசதியை செய்து கொடுத்துள்ளது.

இரண்டாவது கட்டமாக குடிநீர் வசதொழில், கூட்டுறவாளர்ப்பு, பனம் பொருட் வசதொழில்களில் ஈடுபட்டுள்ள மக்களுக்கும் கடன் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றமி. (உ-ரி)

புற்றுநோய் சிகிச்சை: புனர்வாழ்வுத் திட்டம்

பருத்தித்துறை, மே 24

பருத்தித்துறை அதிகாரிகள் புனர்வாழ்வுச் சபை அதிகாரிகளான புனர்வாழ்வுத் திட்டத்தின் இரண்டாம் கட்டமாக அதிகாரி குடும்பங்களிலுள்ள ஏழை விதவைகளுக்கு கோழிப்பண்ணை அமைக்கும் திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

இத்திட்டத்திற்கு முதலில் ஐந்து குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

பருத்தித்துறைப் பகுதியில் வன்செயலால்பாதிக்கப்பட்டவர்கள் கூடவுடியாக பருத்தித்துறை அதிகாரி புனர்வாழ்வுச் சபையின் தலைவர் திரு. ந. குணசீலனுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (உ-118)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். — பைபிள்.

உதயன்

இல. 192/2 நாவலர்வீதி தொலைபேசி: 24805
யாழ்ப்பாணம். 22078
24-05-1987 த.பெ. இல. 28

எதையும் தாங்கும் இதயம் வேண்டும்

வீரர்கள் பிறக்கிறார்களா அல்லது உருவாக்கப்படுகிறார்களா? இரண்டும் உண்டு. எனினும் பெரும்பாலானவர்கள் பிறக்கிறார்கள். ஒரு சில எண்ணிக்கையினரையே உருவாக்க முடியும்.

அஞ்சா நெஞ்சமும், சமயோசித புத்தியும், தியாக மனமும், விளையாட்டில் திறமையும் இயற்கையாகவே உள்ளவர்கள் சிறந்த போர் வீரர்களாக விளங்குவார்கள். அது இயற்கை.

சந்தர்ப்ப சூழ்நிலைகளால், தமக்கு ஏற்பட்ட பாதிப்புகளால், தாய் நாட்டுப் பற்றால் அல்லது ஓர் இலட்சியப் பற்றால் போர் வீரர்கள் உருவாக்கப்படுவதும் உண்டு.

தமிழ் மக்களின் உரிமைகளுக்காக, தமிழ் மண்ணை மீட்பதற்காக, போராளிகளாக மாறியிருக்கும் தமிழ் இளைஞர்களில் மேற்கண்ட இரண்டு வகையினரும் அடங்குவர்.

பலாலியில் கடந்த புதன்கிழமை எதிரணியுடன் நேருக்கு நேர் மோதி வீரமரணம் அடைந்த விரவேலியை ராதா முதலாவது வகையைச் சேர்ந்த வீரன்.

பாடசாலைக் காலத்திலேயே, அவர் சாரணர் இயக்கம், கேடற் குழு மற்றும் விளையாட்டுத் துறைகளில் பிரகாசித்திருக்கிறார். சிரேஷ்ட மாணவத் தலைவராக விளங்கி தலைமைத்துவப் பயிற்சியும் பெற்றிருக்கிறார். கல்வியிலும் அவர் திறமை மிக்கவராகத் திகழ்ந்திருக்கிறார்.

அதே போல அவர் இயக்க வரலாற்றிலும் குறுகிய காலத்தில் துரித முன்னேற்றம் அடைந்தார். பல சாதனைகளைப் புரிந்தார். மன்னார் மாவட்டத் தளபதியாகவும், யாழ்ப்பாண மாவட்டத் தளபதியாகவும் போர் முனைகளில் முன்னேறிச் சென்றார். பல வெற்றிகளையும் ஈட்டியிருந்தார். ராதாவுக்கு இயற்கையாக இருந்த ஆற்றல்களே அவரை முன்னணிக்குத் தள்ளியது.

மன்னார் மாவட்டத்தின் முன்னாள் தளபதி விக்டரின் மறைவு குறித்துக் கடந்த வருடம் அக்டோபர் மாதம் 15 ஆம் திகதி இப்பகுதியில் பின்வருமாறு எழுதியிருந்தோம்.

"... அவர் ஓர் இலட்சியத்துக்காகத் தனது சகபாடிகளை வழி நடத்திய தலைவன் அதனை மறந்துவிட முடியாது.

"ஒரு மாவட்டத்தின் போராளிகளின் சேனையை வழி நடத்திய தமிழ் மண்ணின் மைந்தன். அவன் ஒரு சேனைத்தலைவன். அதனால் அவனது இழப்பு ஓர் இயக்கத்துக்கு ஏற்பட்ட இழப்பு மட்டுமல்ல; இலட்சியத்துக்கு ஏற்பட்ட இழப்பு. தமிழ் மண்ணுக்கு ஏற்பட்ட இழப்பு"

இதே வாசகங்கள், வீரன் தளபதி ராதாவின் இழப்புக்கும் பொருந்தும். நேற்று நடந்த அவனது இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்ட தமிழர் கூட்டம் அதற்குச் சாட்சி.

தமிழ் ஆடவரை விடுங்கள். தாய்மார்கள் இறுதி ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கில் கலந்துகொண்டு தமது சொந்த மகன் இறந்துவிட்டதுபோலக் கண்ணீர் விட்டார்கள்; கதறி அழுதார்கள்.

குண்டுத் தாக்குதல் நடத்துவதை ஆதாரத்தில் இருந்து அவதானிக்கும் அமைச்சர் அத்துலத், ராதாவின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட தமிழர் கூட்டத்தைப் பார்த்திருக்க வேண்டும். அப்போதுதான் அவரது தப்புக்கணக்கு அவருக்கே புரிந்திருக்கும்.

ஆம். தமிழ் மக்களைக் குண்டு வீசி அழிப்பதன் மூலமும், வானத்தில் விமானங்களைக் கண்ட கண்ட நேரமும் ஓடவிட்டு, அவர்களைக் கிலி அடையச் செய்வதன் மூலமும் இந்நாட்டு மக்களை போராளிகளிடமிருந்து பிரித்துவிடலாம் என்ற தனது கணக்குத் தப்பு என்பதை அவர் நிச்சயம் புரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். அதிகாலையிலும் முற்பகலிலும் ஹெலியும், பொம்மரும் வானத்தில் வட்டமிட்டு மிரட்டியிருந்த போதிலும் வீரத் தளபதிக்கு இறுதி அஞ்சலி செலுத்தியவர்களைக் கண்டிருந்தால் அமைச்சருக்கு உண்மை நிலை புரிந்திருக்கும். உண்மை புரிந்துவிட்டால் மனம் மாறி விடலாம் என அஞ்சியும் அவர் அவ்வாறு செய்யத் துணிந்திருக்க மாட்டார்!

உரிமைப் போராட்டங்களில் உயிரிழப்புகள் சாதாரணமானவை. போராளிகள் இறப்பதும் அப்படியே. இழப்புகளைக் கண்டு தமிழ் இளைஞர்கள் துவண்டு விட மாட்டார்கள். அதே போல மக்களும் சலித்துவிடக் கூடாது. ஒரு ராதாவுக்கு பதில் ஒன்பது ராதாக்கள் உருவாகுவார்கள். வீர வரலாறுகள் தொடர்ந்து படைக்கப்பட வேண்டாமா?

இழப்புகளால், சோதனைகளால் வேதனைப்பட்டு சோர்ந்து விடக்கூடாது; ஒதுங்கிவிடக் கூடாது. சுதந்திர வேட்கையில் தளர்வு ஏற்பட்டு விடக்கூடாது. இலட்சியம் நிறைவேறும் வரை— தமிழர் உரிமைகள் வென்றெடுக்கப்படும் வரை— எதையும் தாங்கும் இதயம் வேண்டும். அதுவே இன்றைய தேவை.

பிஜி அகதிகளை நியூஸிலாந்து ஏற்காது

பிரதமர் லாங்கே அறிவிப்பு

வெலிங்டன், மே 23

அடக்குமுறைக்கு ஆளாகி பிஜியில் இருந்து வெளியேறும் இந்திய இனத்தவர்களான அகதிகளுக்கு நியூஸிலாந்து தஞ்சம் வழங்காது; பிரிட்டன் தான் தஞ்சம் வழங்க வேண்டும்.

நியூஸிலாந்துப் பிரதமர் திரு டேவிட் லாங்கே நேற்று அறிவித்தார்.

பிஜியில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியில் பாதிக்கப்பட்டிருக்கும் இந்திய இனத்தவர்கள் நியூஸிலந்து நாட்டில் அகதிகளாகத் தஞ்சமடைய முயற்சிக்கின்றனர்.

இது சம்பந்தமாகக் கருத்து வெளியிடுகையிலேயே திரு. டேவிட் லாங்கே முன்கண்டவாறு தெரிவித்தார்.

பிஜித் தீவுக்கு இந்திய இனத்தவர்களைக் கொண்டு வந்தவர்கள் பிரிட்டிஷார்.

1970 வரை பிஜி, பிரிட்டிஷாரின் ஆட்சியின் கீழ் தான் இருந்து வந்தது.

இப்போதும் பிரிட்டிஷ் மகாராணியின் பிரதிநிதியாக பிஜியில் மகாதேசாதிபதியாக இருக்கிறார்.

ஆகவே அகதிகளாக வரும் இந்திய இனத்தவருக்கு தஞ்சம் அளிக்க வேண்டிய பொறுப்பு பிரிட்டனுக்குத்தான் உண்டு.

—இப்படி பிரதமர் டேவிட் லாங்கே தெரிவித்தார். (உ-எ)

பதவி கவிழ்க்கப்பட்ட பிரதமர் கண்டனம்

சுவா, மே 23

பிஜியின் இடைக்கால அமைச்சரவை அமைக்கப்பட்டமை குறித்து பதவி கவிழ்க்கப்பட்ட பிரதமர் டாக்டர் பவித்ரா கண்டனம் தெரிவித்திருக்கிறார்.

தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட கட்சிகளைக் கூட்டி இடைக்கால அரசு அமைக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார். ஏனைய அமைச்சரவை உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டனர்.

ஆளுநர் நாயகம் ரதுசர் பெனாயா கனிலாவின் கீழ் ஆலோசனை சபை பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டுள்ளது.

இடைக்கால அமைச்சரவைக்கு புரட்சி நடத்திய இராணுவ அதிகாரி கேர்ணல் ரபுகா தலைமை வகிப்பார் என்றும் அறிவிக்கப்படுகின்றது.

அடுத்த பொதுத் தேர்தல் நடைபெறும் வரை இந்த அமைச்சரவை இயங்கும். ஆறு மாதங்களுக்குள் புதிய அரசியலமைப்பு பொதுத்தேர்தல் நடைபெறும்.

இனவிகிதப் புதிய அரசியலமைப்பு ஒன்றைத் தயாரிக்க அமைச்சரவையின் உள்ளவர்கள் எட்டுப்பேர் கொண்ட குழு ஒன்றை தெரிவு செய்யும் என்றும் சபாநாயகர் ரதுசர் அறிவித்திருக்கிறார். (உ-எ)

நஷ்ட ஈட்டுக்கு ஈராக் சம்மதம்

வஷிங்டன், மே 23

வளைகுடாப் பகுதியில் அமெரிக்கக் கப்பல் தாக்கப்பட்டதில் பலியான 37 அமெரிக்க கடற்படை வீரர்களின் குடும்பங்களுக்கு நஷ்ட ஈடு வழங்கப் போவதாக ஈராக் அறிவித்துள்ளது. (இ-எ)

அமெரிக்க நகரில் பெரும் சூறாவளித்தாக்கு

40 பேர் பலி: 100 பேர் படுகாயம்

லண்டன், மே 24

அமெரிக்காவின் டெக்ஸஸ் மாநிலத்தில் உள்ள சார்கோஸா நகரை வெள்ளிக்கிழமை இரவு பெரும் சூறாவளி ஒன்று தாக்கியது.

இதனால் 40க்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். நூற்றுக்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர்.

மேலும் பலர் கட்டட இடிபாடுகளுக்கிடையில் சிக்கியிருப்பதாகப் பிந்திக்கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

சூறாவளி தாக்கிய சமயம் பல குழந்தைகள் உட்பட நூற்றுக்கும் அதிகமானோர் சனசமூக நிலைய மண்டபம் ஒன்றில் கூடியிருந்தனர். இந்த மண்டபம் சூறாவளியால் முற்றாக தரைமட்டமாகியிருக்கிறது.

சூறாவளிக்காற்றினால் பல கார்கள் அலக்காகத் தூக்கி வீசப்பட்டதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

கட்டடங்கள், வீடுகளும் தூக்கி வீசப்பட்டன.

பெரும் விஸ்தீரணமுள்ள ஒரு பிரதேசம் முற்றாகத் தரைமட்டமான தாகத் தொலைக்காட்சி செய்தி நிறுவனங்கள் தெரிவித்தன.

முதலுதவி, பாதுகாப்புப் பணியில் ஈடுபடுவதற்காக அவசர அவசரமாக அப்பகுதி நோக்கிச் சென்ற ஹெலிகொப்டர்கள் சீரற்ற காலநிலை காரணமாக முன்னேற முடியாது திரும்பியுள்ளன.

சார்கோஸா நகருக்கான மின் விநியோகமும் முற்றாகத் துண்டிக்கப்பட்டிருக்கிறது. (உ)

வெளி உலகில்

இந்தியாவுக்கு ரஷ்யா பாதுகாப்பு உதவி தொடர்ந்து வழங்கும்

புதுடில்லி, மே 24

இந்தியாவுக்கு ரஷ்யா தொடர்ந்து பாதுகாப்பு, தொழில் நுட்ப உதவியை வழங்கும்.

ரஷ்யத் தலைவர் மிக்கெய்ல் கோர்பச்சேவின் சிறப்புப் பிரதிநிதியும், ரஷ்ய கம்யூனிஸ்ட்கட்சியின் மத்திய செயற் குழுவின் செயலாளருமான அனடோலி டொப்ரினின் இப்படி உறுதியை தெரிவித்தார்.

இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஆர். வி. சந்தை நேற்று டில்லியில் சந்தித்த போது அவர் இதனைத் தெரிவித்தார்.

பாகிஸ்தானுக்கு அமெரிக்க ஆயுத விநியோகம் செய்வது குறித்தும் இந்திய அமைச்சர் ரஷ்ய பிரதிநிதியுடன் ஆலோசனை நடத்தினார்.

டொப்ரினின் வெள்ளிக்கிழமை இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியைச் சந்தித்துப் பேசினார். (உ-எ)

புதுடில்லியில் தமிழர் கலாசாரநிலையம்

சென்னை, மே 23

புதுடில்லியில் தமிழர் கலாசார நிலையம் ஒன்றை அமைக்க தமிழ் நாடு அரசு திட்டமிட்டுள்ளது.

மாதந்தோறும் புதுடில்லியில் தமிழர் கலாசார நிகழ்ச்சிகளை நடத்துவதே கலாசார மையத்தின் நோக்கம் என்று அறிவிக்கப்படுகின்றது.

தமிழக அரசின் புதுடில்லிச் சிறப்புப் பிரதிநிதியாகப் பணிபுரியும் திரு எம். பட்டுராஜன் இத்தகவலைத் தெரிவித்தார். (இ-எ)

இரு பெரும் கட்டடங்கள் தீயில்!

பிரேஸில் தலைநகரில் 30 மாடிக் கட்டடங்கள் இரண்டு வெள்ளிக்கிழமை பற்றி எரிந்து தீக்கிரையாகின.

இக்கட்டடங்களில் இருந்த வங்கிகள், அரச அலுவலகங்கள் நிலையங்கள் முற்றாகச் சேதமடைந்தன.

இது ஒரு சதிச் செயல் என்று சந்தேகிக்கப்படுகிறது. ஒழுங்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ள மின்சார நிலைக்கள ஊழியர்கள் பற்றிய கோவைகள் மற்றும் தஸ்தாவேஜுகள் எரியுண்ட கட்டடங்கள் ஒன்றில் வைக்கப்பட்டிருந்தன. (உ-எ)

இரு நாடுகள் இணைந்து செயல்படும்

பாரிஸ், மே 23

நடுத்தர ஏவுகணைக் குறைப்புப் பற்றி ரஷ்யா விடுத்த திட்டத்தை குறித்து மேற்கு ஜேர்மனியும் பிரான்ஸும் கூட்டாகச் செயல்படவுள்ளன.

மேற்கு ஜேர்மன் ஜனாதிபதி கோலும் பிரெஞ்சு ஜனாதிபதி மித்திரனும் பாரிஸில் நடத்திய பேச்சுக்களைத் தொடர்ந்து இந்த நிலைப்பாடு உருவானது.

இளைஞர்ச்சியாளர்களுக்கு தொழில் வாய்ப்பு

இஸ்லாமபாத், மே 23

தனது நடவடிக்கையைக் கைவிட்டுத் திரும்பும் ஆப்கன் கிளர்ச்சிக்காரர்களுக்கு தொழில் வாய்ப்பும், பென்ஷனும் வழங்கப்படும். என்று காபூல் அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

ஆப்கன் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வரும் நடவடிக்கையாக இத்திட்டத்தை அமுல் நடத்துவது என்று ஆப்கன் புரட்சிச் சபை தீர்மானித்திருக்கிறது.

பிரான்ஸ் அணுப்பரிசோதனை

பாரிஸ், மே 23

பிரான்ஸ் கடந்த புதன்கிழமை நிலத்துக்கு அடியிலான அணுக்குண்டுப் பரிசோதனை ஒன்றை நடத்தியது.

தெற்கு பசுபிக்தீவு ஒன்றில் இப்பரிசோதனை நடத்தப்பட்டது.

ஜெபத்தின் எதிரி!

'கொர்ச்சிக்கிற சிங்கம் இரை கவ்வுகிறது போல்...' (எபேச 22:26)

ஒரு சிங்கம் தான் விரட்டிச் செல்லும் பிராணியைப் பிடிக்கும் போது முதலில் அதன் தொண்டையைத்தான் பிடிக்கும்.

ஏனெனில் தொண்டை பிடிபட்டால் அந்த மிருகத்தால் சத்தமிட முடியாது மிக விரைவில் மூச்சுத் திணறிப்போகும். பின்பு அதனால் தப்பி ஓட முடியாது.

சாத்தானையும் வேதம் சிங்கத்திற்கு ஒப்பிட்டுத்தான் பேசுகிறது. சாத்தான் ஒரு விசுவாசியை மேற்கொள்ள நினைக்கும் போது முதலாவது அவன் தொண்டையாகிய ஜெப

ஞானக்கதிர்

ஜீவியத்தைத்தான் பிடித்து நிறுத்துகிறான்.

சுவாசத்தைப் போல இருக்கும் அவனது ஜெபத்தை நிறுத்தி வைத்துவிட்டால் பின்பு அவனை மேற்கொள்வது எளிது என்று அவன் எண்ணுகிறான்.

ஆகவேதான் வேதம் எச்சரிக்கிறது. 'தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில் உங்கள் எதிராளியான பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றித் திரிகிறான். (1 பேதுரு 5:8)

நாம் ஜெபிக்க முடியாதபடி எத்தனையோ தடைகளைக் கொண்டுவர முடியுமோ அத்தனையையும் சாத்தான் கொண்டு வருவான். நீ ஜெபத்தில் உறுதியாய் நிற்பாயானால் அவன் கொண்டு வரும் எந்த ஆயுதமும் உன்னை மேற்கொள்வதில்லை.

நீ உறுதியோடு விண்ணப்பம் பண்ண ஆரம்பித்துவிட்டால் அவன் தோற்று, நடுங்கி ஓடிப்போவான். நீ புதிய விசுவாசியாயிருக்கலாம்; அல்லது எல்லா ஊழியரிலும் நீ சிறியவனென்று சொல்லலாம். ஆனால்

உனது ஜெபம் எவ்வளவு பெரிய சத்துருவின் போராட்டமானாலும் அதை வென்றே தீரும். 'சிங்கத்தின் மேலும், விரியன்பாம்பின் மேலும் நீ நடந்து பால சிங்கத்தையும், வலுசர்ப்பத்தையும் மிதித்துப் போடுவாய்' (சங் 91:13)

சங்கானை வங்கியில் தினமும் 50 பேருக்கே இனிமேல் ஓய்வூதியம்

வட்டுக்கோட்டை, மே 24

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் இனிமேல் நாள் ஒன்று 50 பேருக்கே ஓய்வூதியம் வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கிராமிய வங்கியில் சிங்கப்பூர், மலாயன் பென்சனியர்கள் உட்பட மாதந்தோறும் சுமார் 800 ஓய்வூதியக்காரர்கள் தமது ஓய்வூதியத்தை முழுமையாகப் பெறமுடியாது பகுதி பகுதியாகவே பெற்று வந்தனர்.

சிலர் தொடர்ந்து பல நாட்கள் இந்த வங்கிக்குச் சென்று தமது ஓய்வூதியத்தைப் பெறமுடியாது ஏமாற்றத்துடன் ... மத்தைக் குறைக்கும் நோக்கத்துடனேயே தினமும் 50 ஓய்வூதியகாரர்கள் என்ற வீதத்தில் அவர்களது முழுமையான ஓய்வூதியத்தைக் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புதிய திட்டத்தின்படி மாதம் தோறும் எல்லோரது ஓய்வூதியம் வழங்க சுமார் 16 நாட்கள் எடுக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எல்லைக்குட்பட்ட கிராமங்களில் வாழ்பவர்களே பெரும்பாலும் இந்த கிராமிய வங்கியில் தமது ஓய்வூதியத்தைப் பெற்று வருகின்றனர். (உ-161)

சமய சந்நிதிகளில்

மஹோற்சவம்

நீர்வேலி அருள்மிகு சந்தசுவாமி கோவில் மஹோற்சவம் இன்று காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். தொடர்ந்து 21 தினங்கள் நடைபெறும் மஹோற்சவம் ஜூன் மாதம் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை திருக்கல்யாண விழாவுடன் நிறைவுறும்.

ஜூன் 6 ஆம் திகதி மாம்பழத் திருவிழாவும், 8 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும் 10 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுதினம் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

பகல் திருவிழாக்கள் காலை 8-30 மணிக்கு முன்னரும் இரவுத் திருவிழாக்கள் இரவு 8-30 மணிக்கு முன்னரும் நடைபெற்று முடிவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மூடப்பழக்கங்களை களைவதே ஆசிரியர் பணி

பிரிவுபசார விழாவில் உரை

யாழ்ப்பாணம், மே 24

சமூகத்தில் தேவையற்று வளர்ந்து வரும் மூடப்பழக்க வழக்கங்களை வேருடன் களைந்தெறிவதற்கும், ஒழுங்கு, கட்டுப்பாடு, கண்ணியம் வாழ்க்கை முறை இளவயதிலிருந்தே மாணவர்கள் மத்தியில் வளர்த்தெடுப்பதற்கும் ஆசிரியர்கள் தம்மாலானவற்றைச் செய்யவேண்டும். அதுவே நம் சமுதாயத்துக்குச் செய்யக் கூடிய பெரும் பணி.

—இவ்வாறு யாழ் இந்துக் கல்லூரி ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற திரு. எட்வேட் செல்வநாதனுக்கு அளிக்கப்பட்ட பிரிவுபசார வைபவத்தில் ஆசிரியர் திரு ஏ. மகாதேவா எடுத்துக் கூறினார்.

கல்லூரி அதிபர் திரு. எஸ். பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற இப்பிரிவுபசார வைபவத்தில் திரு மகாதேவா மேலும் பேசுகையில் திரு. செல்வநாதன் நல்ல கருத்துக்களை மாணவர்களுக்குப் பரப்பி வந்தார் என்றும்—

ஆங்கில நாடகத் துறையில் மாணவர்களை நாட்டம் கொள்ளச் செய்வதன் மூலம் கலைத் துறையை வளர்த்தார் என்றும் குறிப்பிட்டார்.

ஆசிரியர் கழகத் தலைவர் திரு. எஸ். சோமசுந்தரம் தமதுரையில் திரு செல்வநாதனின் சலியாத 38 ஆண்டுக்கால ஆசிரிய சேவை பற்றிப் பாராட்டினார். யாழ் இந்துக் கல்லூரி உயர்வுக்காக கடந்த பத்தாண்டுகள் அவர் ஆற்றிய மகத்தான சேவை மறக்கமுடியாதது என்றார்.

ஆசிரியர்கள் திரு. எஸ். ஜெயானந்தகுரு, திரு. மகேசன் திரு சிவராஜா ஆகியோரும் உரை நிகழ்த்தினர். (உ)

மணவாளக்கோல விழா

வட்டுக்கோட்டை, மே 24

வட்டுக்கோட்டை கிழக்கு கன்னார் பிராந்துவளவு ஞானகாளி காதேவி சமேத ஞான வைரவர் ஆலய மணவாளக்கோல விழா இம்மாதம் 31 ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) காலை 6 மணியளவில் பூஜை ஆரம்பமாகி விநாயகர் கும்ப அபிஷேகத்துடன் மறுநாள் திங்கட்கிழமை அதிகாலை 5 மணியளவில் முடிவடையும். (உ-161)

நாட்டரிசி விலையேற்றம்

கொடிகாமம், மே 24

நாட்டரிசியின் விலை கொடிகாமம் சந்தையிலும் வர்த்தக நிலையங்களிலும் சற்று அதிகரித்து வருகிறது. (உ-78)

ரமழான் சிந்தனை

"நோன்பு நரகத்தைத் தடுக்கும் கேடயமாகும்" என்று நபிகள் நாயகம் அவர்கள் குறிப்பிட்டு உங்களில் எவரேனும் நோன்பு நோற்றிருந்தால் அந்த தினம் உங்களில் எவரும் மருவுதல் பற்றித்துப் பேசுவதோ கூடாது. நீங்கள் இரைந்தும் பேசவேண்டாம். எவரேனும் உம்மை ஏசினால் அல்லது வலுச் சண்டைக்கு வந்தால் "நிச்சயமாக நான் நோன்பாளி" "நிச்சயமாக நான் நோன்பாளி" எனக் கூறி விடவும் என்று விளக்கி உள்ளார்கள்.



பொய்யாமொழி

குறள்:
எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு.

பொருள்:
(செய்யத் தகுந்த) செயலையும் வழிகளையும் எண்ணிய பிறகே துணிந்து தொடங்க வேண்டும். துணிந்தபின் எண்ணிப் பார்க்கலாம் என்பது குற்றமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"TOEFL"
Weekend Classes
Duration — 8 Months
Full Fees 250/- only
Commencement: 11-04-1987
Lectures by Popular English Lecturer
Mr. Kandiah Navarandran
Cantabia Institute
21, Main Street, Jaffna, Phone: 24201 — 13, Rasavinthodam Lane, Jaffna.

உதயன்

24 - 05 - 1987 ஞாயிற்றுக்கிழமை

COMPUTER PROGRAMMING
BASIC LANGUAGE
6 Months - Weekends
Commencement: 25-4-1987
Fees: Rs. 1500/-
JOIN THE LEADERS
Cantabia Institute
21, Main Street, Jaffna. Phone: 24201 — 13, Rasavinthodam Lane, Jaffna.



தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் பிராந்தியத் தளபதி லெப்டினன்ட்கேர்னல் ராதாவின் இறுதி ஊர்வலம் நேற்று நடந்தபோது எடுக்கப் பட்ட படம். (படம்: சன்)

போராளிகள் புதைக்கப்படுவதில்லை

விதைக்கப்படுகிறார்கள்

ராதாவின் ஈமக்கிரியையில் திலீபன் உரை

யாழ்ப்பாணம், மே 24
போராளியின் சாவுக்குப் பின்னும் சரித்திரம் படைப்பவர்கள். அவர்கள் புதைக்கப்படுவதில்லை, விதைக்கப்படுகிறார்கள். தமிழீழத்தின் மாத்தளை மலைகள், இலட்சியவாதி ராதா இப்படியான இலட்சியவாதிகள் உலக வரலாற்றில் சில கால கட்டங்களில் மட்டுமே உருவாகிறார்கள்.

விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் திரு திலீபன் இவ்வாறு கூறினார்.

நேற்று நடைபெற்ற புலிகளின் யாழ் மாவட்டத் தளபதி ராதாவின் ஈமக்கிரியையில் போது திலீபன் இரங்கலுரை ஆற்றினார்.

திலீபன் மேலும் பேசுகையில் கூறியதாவது:- 1983ஆம் ஆண்டு புலிகள் இயக்கத்தில் சேர்ந்த ராதா விடுதலை நிறமாளாலும் ஆசாதாரண ஆற்றலாலும் மிகக் குறுகிய காலத்திலேயே ஓர் படிநிலை முகாமின் பொறுப்பாளராகி.

தனது அபாரத் திறமையால் திறமை மிக்க பல போராளிகளை ராதா உருவாக்கினார்.

விக்ரரேசாடு மன்னாரில் பல வீர தீரச்செயல்களைப் படைத்த ராதா விக்ரரின் மறைவின் பின் தலைமைப் பாத்திரத்தை ஏற்ற ஜலராதனையின் நினைவாகிய நாடகம்.

பின்பு யாழ். குடாநாட்டில் இராணுவமுகாம் தீபுக்களைத் தொடர்ந்து யாழ் குடாநாட்டில் நடைபெற்ற நடவடிக்கையில் பங்கேற்றார்.

யாழ். பொலீஸ் விடுதி தாக்குதலில் முக்கிய பங்கேற்ற ராதா அதன்பொறுப்பை எனக்கு வழிவகுத்தார்.

இறுதித் தொடர்ந்த யாழ் பிராந்தியத்தின் பொறுப்பை ஏற்ற ஹாரி வியூ மினி முகாம், மயிலிட்டி மினி முகாம் தாக்குதல்களுக்கு தலைமை வகித்து சரித்திரம் படைத்தார்.

ராதா மறைந்தாலும் அவர் பணி தொடர ஆயிரம் ஆயிரம் ராதாக்கள் உருவாகி வேகத்துடன் அணி வகுத்து நிற்கின்றனர்.

இந்த உறுதியான உத்வேகம் மறைந்த மாவீரனின் இலட்சியத்தை சென்றெய்தும் என்பதில் எனது ஐயமுமில்லை.

மறைந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் வரிசையில் யாழ் மாவட்டத் தளபதி லெப்டினன்ட் கேர்னல் ராதா 525 வது இடத்தைப் பெறுகிறார்

இவ்வாறு திரு திலீபன் தமது உரையிலுரையில் தெரிவித்தார். (இ-ஊ)

ராதாவின் - - -

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தச் சென்றனர்

ஊர்வலத்தில் யுனிசெப் தாக்கமர்களுமே அதிகம் காணப்பட்டனர்.

ஹெலி ஒன்று ஊர்வலத்துக்கு நேர் மேலே பறந்தபோதும் மக்கள் பதற்றமடையாமல் ஊர்வலத்தில் சென்றனர்.

அதிகாலையில் இப்பகுதியில் இரண்டு கொம்பனிகள் பறந்த சென்றன மரணத்தில் புலிகளின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் திலீபன் உட்பட பலர் அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

இரு நிமிட நேர மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு மரியாதை வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

மலர்மாலையால் மூடப்பட்டுவைக்கப்பட்டிருந்த ராதாவின் பூதவுடலுக்கு அவரது தந்தையார் தீ மூட்டினார்

யாழ் - கொழும்பு போக்குவரத்து வழமைக்குத் திரும்புகிறது

யாழ்ப்பாணம், மே 24
யாழ் - கொழும்பு போக்குவரத்துச் சேவைகள் நேற்று முதல் ஒரளவு வழமைக்குத் திரும்பின.

அங்கமாக ஆனையிறவு, பளைப் பகுதி களில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாக சில போக்குவரத்துக்களும் நிறுத்தப்பட்டிருந்தன.

எனினும் சில போக்குவரத்துச் சேவைகள் மாத்திரம் பகுதியுடனாக நடைபெற்றன.

நேற்று முதல் ஆனையிறவு பரந்தனுடனான சிறிய பஸ்கள் போக்குவரத்துச் சேவைகளை நடத்தின.

லொறிகளும் போக்குவரத்தை மேற்கொண்டன.

இன்று பெரிய பஸ்களும் சேவையில் ஈடுபடலாம் என நம்பப்படுகிறது (இ-10)

ஐவர் நி[illegible]. . .

(1ம் பக்க தொடர்ச்சி)

பின்னர் சண்முகராசா, ஆறுமுகம்பிள்ளை சத்தியமூர்த்தி, புவிராஜ் ஆகியோரின் நிலையே கவலைக்கிடமாக உள்ளது.

எட்டுத் தினங்களாக வேறு ஐந்து இளைஞர்கள் உண்ணாவிரதமிருந்து வருகின்றனர்

இவர்களை டாக்டர்கள் சென்று பார்த்ததில்லை என்றும் கூறப்படுகிறது (இ-ஊ)

ராணுவத் - - -

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வாரத்து ஆகியன தடுக்கப்படுகின்றன

அப்பாவிகள் கொல்லப்படுகின்றனர், உடைமைகள் சேதமாக்கப்படுகின்றன- இப்படி பத்திரிகைகள் தெரிவிக்கின்றன.

இராணுவத் தாக்குதல் ஒரு பக்கம் தொடர்கிறது. மறுபக்கம் இந்திய பாலைக் கண்டிக்கும் பேச்சுக்களை இலங்கை அரசுத் தலைவர்கள் சிலர் நாடாளுமன்றத்தில் நிகழ்த்தி வருகின்றனர்.

இலங்கை, தமிழக அரசுகளுடன் பேச்சு நடத்தவிருக்கிறது. இந்திய மத்திய அரசுடன்தான் பேச்சுக்களை நடத்துகிறது.

இச்சந்தர்ப்பத்தில் இலங்கை அரசுத் தலைவர்கள் சிலர் இந்தியாவைக் கண்டித்துப் பேசுவது எவ்வகையில் நியாயமாகும்—

இப்படி திரு பூரீ. வெளியுறவு அமைச்சர் சாகுல் ஹமீதிடம் தெரிவித்தார். (இ-ஊ)

படுகொலை. . .

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஈரோஸுக்கும் தமிழ்நாடு அரசு எழுங்கிய நிதி உதவி தொடர்பாக எழுந்த தலதி முதலி மேலும் கூறியதாவது:-

நிலைய நிலைமை உள்ள எவரும் தமிழ்நாடு அரசின் நடவடிக்கையைக் கண்டிக்க வேண்டும்.

ஒரு மாதில அரசு இப்படி நடந்து கொள்வது ஜ. நா. சாசனத்துக்கோ அணிசேரா இயக்கம், சார்க் அமைப்பின் கோட்பாடுகளுக்கோ முரணானது.

இந்திய மத்திய அரசு சமரச முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது தமிழக அரசு இப்படி நடந்து கொள்வது இந்திய மத்திய அரசுக்கு [illegible] ஆனது

இப்படி எழுந்த அந்த [illegible] கேட்டபின் மேலும் கூறினார். (இ)

இலங்கையின் ப.

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

றது.

பிரதமர் காந்தி இருபுக்கரம் கொண்டு அடக்களாம் நாம் பிரதமர் கரம் கொண்டும் அடக்க முடியாமல் உள்ளது.

பிரபாகரன் இன்று இந்தியாவைக் கடுப்படுத்த முயற்சிக்கிறார். பிரபாகரனுடன் முதலில் ஆலோசிக்காமல் ஒரு வார்த்தையும் கூற முடியாத நிலையில் இந்திய தலைவர்கள் இருக்கின்றனர்.

அவர்கள் பிரபாகரனைக் வைது செய்கிறார்கள் இன்னு பிரபாகரன் சுதந்திரமாக உலாவுகிறார்.

அரசியல் தீர்வு பற்றி இந்தியா பேசுகிறது இலங்கைப் பிரச்சினைக்கு அடிப்படைக் காரணமே இந்தியா தான். இப்படி பிரதமர் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். (இ-ஊ)

மணமகள் தேவை

கொழும்பில் புறக்கோட்டையில் சொந்த வியாபார நிலையத்தின் உரிமையாளரும், மாதம் 10,000/- ரூபாவுக்குக் குறையாத வருமானமும், நல்ல தோற்றமும் கல்வியும், பண்பும் உடையவரும், புகை, குடிப்பழக்கமற்றவருமான 30 வயது மதிக்கவர் குல இந்து மணமகனுக்கு அழகும் நற்குணமும் வாய்ந்த மணமகள் தேவை. சீதனம் பெரிய அளவில் வற்புறுத்தப்பட மாட்டாது. முதற்கடிதத்திலேயே ஜாதகக் குறிப்புடன் சகல விபரங்களும் தருக.

விளம்பர இல. 59,
c/o உதயன்
த. பெ இல 88
யாழ்ப்பாணம். (1836)

ஷப்ரு
யுனிக்கோ பிஞன்ஸ் லிமிட்டெட்
மானிப்பாய் உபகிளை
முளாய், கழிபுரம், கல்லுக்கோட்டை, சிந்தன்வேணி, சங்கானை, பண்டத்தரிப்பு இளவாலை, அளவெட்டி, உடுவில், மானிப்பாய் பகுதி வாழ் வாடிக்கையாளர்களின் நலன் கருதி —
யாழ்ப்பாணம்-மானிப்பாய் வீதி
184ஆம் இலக்க கட்டடத்தில்
(இலங்கை வங்கிக்குச் சமீபமாக)
புதிய உபகிளையைத்
திறந்துள்ளோம்
உப கிளையில் நாளை திங்கட்கிழமை (25-5-1987) அலுவல்கள் ஆரம்பமாகும்.
* வலிகாமம் மேற்கு, வலிகாமம் தெற்குப் பகுதிகளைச் சேர்ந்த வாடிக்கையாளர்கள் தமது வைப்புப் பணத்தைக்குரிய வட்டியை நாளை முதல் அங்கு பெற்றுக்கொள்ளலாம்.
* வாடிக்கையாளர்களை தமது ஆண் அதிகாரிகளை கருதிப்படுத்தும் விதத்தில் அடையாள அட்டையைக் கொண்டுவந்து ஒத்துழைக்கு மாறு கேட்டுக்கொள்கிறோம்.
* வலிப்பு பணத்தை நிரந்தரமாக மானிப்பாய் உப கிளையில் பெற்றுக் கொள்ள விரும்புவோர், உப கிளைப் பொறுப்பதிகாரியிடம் பதிவுசெய்து கொள்ளலாம்.
வாடிக்கையாளர்களே!
நீங்கள் யாழ். நகரம் சென்று சிரமப்படுவதையும் ஆபத்தில் சிக்குவதையும் தவிர்த்து —
மிகப் பாதுகாப்பான சூழ்நிலையில் ஆற அமர உங்கள் அலுவல்களைச் செய்து கொள்வதற்கு வசதியாகவே—
புதிய உபகிளையை ஆரம்பித்துள்ளோம்.
இனியும் தயக்கம் வேண்டாம்!
நிதித் துறையில் என்றும், எப்போதும் உங்கள் நண்பனான "ஷப்ரு"வை நாடுங்கள்!
உங்கள் நண்பர்களுக்கும் அதன் நாணயத்தை எடுத்துச் சொல்லுங்கள்.
நாணயம் மட்டும் என்ன?
நம்பிக்கை, உத்தரவாதம், நட்புறவு தழுவிய உபசரிப்பு என்பவற்றுக்கும் பெயர் பெற்றது 'ஷப்ரு'வே!

ஜொலிஸ்ராஸ் சுற்றுக்கிண்ண
மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்
கிரிக்கெட் போட்டி
உதயன்-"ஷப்ரு"
ஆதரவில்
யாழ். ஜொலிஸ்ராஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும்
"நொக் அவுட்" முறையிலான
மாபெரும்
கிரிக்கெட் போட்டி
வட மாகாண ரீதியில் நடத்தப்படும் மேற்படி மட்டுப்படுத்தப்பட்ட 30 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டியில் பங்குபற்ற விரும்பும் அணிகள் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவங்களையும் மேலதிக விபரங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.
செயலாளர்:
ஜொலிஸ்ராஸ் விளையாட்டுக் கழகம்
60\2, யாழ். இந்துக் கல்லூரி ஒழுங்கை,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

நிருபர் பட்டியல்

சின்னட்டியார்—சிவசம்பு

(இளைப்பாறிய நயாலதிபர்)

திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் காலஞ்சென்ற சின்னட்டியார் சின்னக்குஞ்சு தம்பதி களின் ஓர் புதல்வரும், சங்கானையைச் சேர்ந்த காலஞ்சென்ற கதிர்காமர் சண்முகம், இளைய பிள்ளை தம்பதிகளின் அருமை மருமகனும், சிவக் கொழுந்தின் அருமை மனைவருமாகிய திரு சிவசம்பு அவர்கள் 23-05-87 அன்று காலமாகிவிட்டார். இவர் ஸ்ரீதாஸ் (இளைப்பாறிய நிலஅளவை உதவி அத்தியட்சகர் - தற்போது U.S.) லோறிஜி ஸ்ரீஹான் (கல்கிஸ்சமும், சிங்கப்பூர்) திருமதி கௌரி சிவம் ஞானரத்தினம் (கனடா) ஸ்ரீஸ்ரீதன் (லோறி முத்துக் கிருஷ்ணா & கம்பெனி) ஆகியோர்களின் அன்புத் தந்தையும், திருமதி செல்வநாயகி (சிரேஷ்ட வரிமதிப்பாளர்) திருமதி ஜூலி, ஞானரத்தினம் (பொறியியலாளர், கனடா) திருமதி யசோதா (ஆசிரியை, சித்துக் கல்லூரி, கொழும்பு) ஆகியோர்களின் அன்பு மாமனாரும், சிவகுருநாதர் (இளைப்பாறிய நிலஅளவை உதவி அத்தியட்சகர்), சாம்பசிவம் (இளைப்பாறிய சிரேஷ்ட வரிமதிப்பாளர்) ஆகியோர்களின் அன்பு மைத்துனரும், செந்தூரன், ஆனந்தி, சாரதாவி, ஷண்முகன், குருபரன், குருநாதன், சங்கரி, சுஜன் ஆகியோர்களின் அன்புப் பேரனாவார். அன்னாரின் பூதவுடல் அவரதிருமனையைக் கடந்து இன்று ஞாயிற்றுக்கிழமை (24-05-87) பிற்பகல் 3-00 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இப் பத்திரிகை நியூ உதயன் பப்லிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்டுக்காகவும் அதற்காகவும், யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 24-05-1987.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd at 292/2, Navalar Road, Jaffna on Sunday May 24, 1987 Registered as a Newspaper at the General Post Office under number QJ/94/N/87.

இறுதித் தாக்குத...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து யாழ் குடா மீது குண்டு வீச்சை அரசப்படைகள் நடத்தின.

எம்.ஆர்.ஐ., ஈரோஸ் ஆகியவற்றின் முகாம்கள் அழிப்பதுதான் அரசின் நோக்கம் சிங்கள மக்களைத் திருப்திப் படுத்துவதும் ஒரு நோக்கமே.

கேள்வி: இப்படித் தாக்குதல் நடத்துவதன் மூலம் இலங்கை அரசு என்ன நோக்கத்தை அடையப் போகிறது?

றெற்றி: இலங்கை அரசிடம் கிட்டவட்டமான உதவி ஏதும் கிடையாது.

நடக்கும் சம்பவங்களைப் பொறுத்தே அரசின் இராணுவ நடவடிக்கைகளும் அமைகின்றன.

யாழ் குடா நாட்டை மீண்டும் பிடிக்க வேண்டும் என்பதுதான் அரசு இலட்சியமாக இருக்கின்றது.

தெரியாதா?

கேள்வி: இப்படித் தீவிரமான தாக்குதல் ஆரம்பித்தவுடன் தமிழத் தீவிரவாதிகளுக்கு இந்திய உதவுவதுதான் நடக்கும். அது இலங்கைக்குத் தெரியாதா?

றெற்றி; தெரிகிறது. இப்போது தமிழ் நாடு அரசு 31 லட்சம் ரூபா டாலர் உதவியை இரண்டு போராளிகள் அமைப்புக்களுக்கு வழங்கியுள்ளது.

கேள்வி: யாழ் குடா நாட்டை பிடிப்பதனால் பிரச்சினைக்கு தீர்வுண்டு விடலாம் என்று இலங்கை அரசு எண்ணுகின்றதா?

றெற்றி: இராணுவரீதியிலான எந்த வெற்றியும் பிரச்சினைக்கு தீர்வாகாது. பேச்சுக்கள் மூலம் அரசியல் தீர்வு காணப்படவேண்டும்.

கருத்துவேற்றுமை

கேள்வி: இது குறித்து அரசாங்கத்தில் கருத்து வேற்றுமை உண்டா?

றெற்றி: அமைச்சரவையில் இது குறித்து கருத்து பேதம் நிலவுகின்றது. பேச்சுக்கள் மூலம் தீர்வு காணப்படமுடியாது என்று கருதுபவர்கள் இது தாமதமாகிறதாகச் செய்கிறார்கள்.

பெரிய ஆளில்லா விமானத் தாக்குதல் வார இறுதியில் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் என்று கூறப்படுகின்றது. பொறுத்து இருந்துதான் பார்க்கவேண்டும்.

ஏற்கனவே 8 ஆயிரத்துக்கும் அதிகமான பாதுகாப்புப் படையினர் யாழ் குடா முகாம்களில் இருக்கின்றனர். மேலதிகமாக 3 ஆயிரம் துருப்புக்கள் [illegible] கூறப்படுகின்றது. (உ-ஊ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org